# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 - 4354302

# சாத்தான் இயல்

**முன்னுரை :**

இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி இல்லை என்று மறுதலிப்பவர்கள் அசுத்த ஆவிகள் இருப்பதையும், அவைகள் ஆட்கொள்ளுவதையும் குறித்துப் பரிகாசமாகப் பேசுகிறார்கள். மேலும் சிலர், கிறிஸ்து அசுத்த ஆவிகளை வெளியேற்றினது அவருடைய வெற்றிக்கு அடையாளமாக மட்டுமே இருக்கிறது என்று எண்ணுகிறார்கள். மேலும் பலர், அசுத்த ஆவிகள் என்று சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் கிறிஸ்து இவைகளை குறித்து போதித்ததெல்லாம் ஒரு மத மூடநம்பிக்கையாகவே இருக்கிறது என்று சொல்கிறார்கள். அசுத்த ஆவிகளை வழிபட்டு வருகிற மக்கள் மத்தியில் ஊழியம் செய்கிற நூற்றுக்கணக்கான தேவ ஊழியர்கள் அசுத்த ஆவிகள் இருக்கின்றன என்றும், அவைகள் மக்களை ஆட்கொண்டு துன்பப்படுத்துகிறது உண்மை என்றும் சாட்சி கொடுத்திருக்கிறாா்கள். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், மற்றும் நாகரீகம் அடைந்த நாடுகளிலும் நடக்கின்ற கீழ்க்கண்ட காரியங்கள் முலம் அசுத்த ஆவிகள் இருக்கிறது என்பதை அறிந்து கொள்ளமுடியும். அதாவது சட்ட விரோதமான குற்றங்கள், துன்மார்க்கம், இயற்கைக்கு மாறான காரியங்கள், ஒழுக்கங்கெட்ட காரியங்கள் மிருகத்தனமான செயல்கள், மதக்குழப்பங்கள், பொய்யான மதங்கள், பொய்யான மதத்தைப் போதிப்பவர்கள், ஜாதகம் பார்பதில் விருப்பம், குறிசொல்லுதல், மாந்திரிகம் செய்தல், ஆவிகளோடு பேசுதல் முதலானவை. அசுத்தஆவிகள் இல்லை என்று மறுதலிப்பது வேதவசனத்தின் அதிகாரத்தையும், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையையும், அப்போஸ்தலர்களின் உத்தமத்தையும் குறித்து கேள்விக்குறி எழுப்புவதாக இருக்கும். எனவே இப்பாடத்தில் அசுத்த ஆவிகள் இருப்பதையும், அவைகளின் எண்ணிக்கை, அவைகளின் வல்லமை, அவைகளின் இயல்புகள், அவைகள் செயல்படும்விதம், அவைகளை மேற்கொள்வதற்கு உங்களுக்குத் தேவையான பலம், அவைகளின் இறுதி தண்டனை முதலானவைகளை விளக்குவதே எங்களின் முக்கிய நோக்கமாகும்.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

சாத்தானுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிற பொல்லாத ஆவிகளின் சேனைகளோடு தொடர்ந்து போராட்டம் இருக்கிறது என்பதை இலட்சக் கணக்கான கிறிஸ்தவர்கள் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்தவ ஜீவியத்தில் வரக்கூடிய அநேக தோல்விகள், சோர்வுகள், துக்கங்கள் இவைகள் அனைத்தும் அசுத்த ஆவிகளால் உண்டாகக் கூடியவைகளாகும். ‘‘ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு’’ (எபேசியர் 6:12). வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ விரும்புபவர்களாகிய நாம் இவ்விதமான ஒரு போராட்டம் அசுத்த ஆவிகளோடு இருக்கிறது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டியது எவ்வளவு முக்கியமாய் இருக்கிறது. அசுத்த ஆவிகளின் தன்மை, எண்ணிக்கை முதலானவற்றைக் குறித்து நமக்கு சரியான அறிவு இல்லையென்றால், உலகத்தில் நடக்கக் கூடிய ஊழல்கள், மதக்குழப்பங்கள், சத்தியத்தை மறுதலித்து பொய்யை பின்பற்றும்நிலை இவைகளை சரியாக நாம் அறிந்து கொள்ள முடியாது. எனவே இப்பாடத்தின் முக்கியத்துவத்தை இதற்கு மேல் வற்புறுத்திக்கூற முடியாது. ஜெபத்தோடும், கவனத்தோடும் இப்பாடத்தைப் படிக்கவும். ‘‘தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர் களாகும்படிக்கு’’ தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துகொள்ள இப்பாடம் உதவியாக இருக்கவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபம் (எபேசியர் 6:13).

**பாடம்**

## I. அசுத்த ஆவிகள் இருக்கிறது என்பதை எப்படி நாம் அறிந்து கொள்ள முடியும்?

அ. அசுத்த ஆவிகள் இருப்பதையும், அவைகளுடைய செயல்களையும் பழைய, புதிய ஏற்பாடுகளிலிருந்து நாம் அறிந்து கொள்கிறோம்.

**1. பழைய ஏற்பாட்டில் :**

i) இஸ்ரவேல் ஜனங்கள் தெய்வமல்லாதவைகளுக்கு (பேய்களுக்குப்) பலியிட்டு, அவர்களுடைய மாயைகளினால் தேவனைக் கோபப்படுத்தினார்கள் (உபாகமம் 32:21). அவர்கள் தங்கள் குமாரரையும் தங்கள் குமாரத்தி களையும் பிசாசுகளுக்குப் பலியிட்டார்கள் (சங்கீதம் 106:37).

ii) ''தாங்கள் சோரமார்க்கமாய்ப் பின்பற்றுகிற பேய்களுக்குத் தங்கள் பலிகளை இனிச் செலுத்தாதிருப்பார்களாக; இது அவர்கள் தலைமுறைதோறும் அவர்களுக்கு நித்திய கட்டளையாயிருக்கக்கடவது'' (லேவியராகமம் 17:7). தேவனாலே விலக்கப்பட்ட இக்காரியம் புதிய ஏற்பாட்டுக் காலத்திலும் இருந்தது (1 கொரிந்தியர் 10:20).

iii) குறிசொல்லுகிறவனும், நாள்பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும் உங்களுக்குள்ளே இருக்க வேண்டாம் என்று மோசே இஸ்ரவேல் ஜனங்களை எச்சரித்தார் (உபாகமம் 18:10–12).

**2. புதிய ஏற்பாட்டில் :**

i) ''பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன'' (யாக்கோபு 2:19) பிசாசுகள் ஜீவிக்கின்றன என்பதற்கு இவ்வசனம் ஆதாரமாக உள்ளது.

ii) ''ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனுஷன் இருந்தான்.'' இவ்வசனம் பிசாசுகளின் தன்மைகளை விவரிக்கிறது (லூக்கா 4:33). ''அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் வந்து ஆரோக்கியமடைந்தார்கள்'' (லூக்கா 6:18).

iii) ''திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டு வந்து, உட்புகுந்து அங்கே குடியிருக்கும்'' (மத்தேயு 12:45). இவ்வசனத்தின் மூலம் பிசாசு அசுத்தமானதும், பொல்லாததுமாய் இருக்கிறது என்று கருதப்படுகிறது.

iv) ''சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்?'' (மத்தேயு 12:26,27). அசுத்த ஆவிகள் சாத்தானுடைய தூதர்களாய் இருக்கிறார்கள் என்று இவ்வசனத்தின் மூலம் உணர்ந்து கொள்கிறோம்.

v) ''அப்பொழுது அவர் அவனை நோக்கி : உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன்: நாங்கள் அநேகராயிருக் கிறபடியால் என் பேர் லேகியோன்'' என்று சொன்னான் (மாற்கு 5:9). ''அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான்'' (மாற்கு 1:23). ''அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக் கொண்டிருந்தான்''(மாற்கு 5:3–5).

vi) அசுத்த ஆவிகள் அனைத்தும் கிறிஸ்துவின் வல்லமைக்குக் கீழ்ப்பட்டதாயிருக்கிறது. ''பிசாசு பிடித்தவர் களையும் சந்திரரோகிகளையும், திமிர்வாதக்காரரையும் அவரிடத்தில் கொண்டு வந்தார்கள், அவர்களை சொஸ்தமாக்கினார்'' (மத்தேயு 4:24).

''அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர் : சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக் காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' (மத்தேயு 25:41).

ஆ. வேத வசனத்தின் அதிகாரம் :

சாத்தானும் அவனுடைய சேனைகளும் இல்லையென்றால் வேதத்தில் கூறப்பட்டுள்ள பெரும்பான்மையான காரியங்கள் கட்டுகதைகளாகவே இருக்கும்.

இ. மதத்தைக் குறித்ததான வரலாற்றின் சாட்சியம் :

பண்டைக்காலத்திலும், அசுத்த ஆவிகள் நிறைந்து காணப்பட்டது என்பதற்கு தொல்பொருள் ஆராய்ச்சிகள் சான்றுகள் கொடுக்கிறது. மதங்களின் தோற்றத்தைப் படிக்கும் பொழுது உலகம் முழுவதிலும் ஒவ்வொரு மதமும் பிசாசு, அவனுடைய தூதர்கள் இருக்கிறார்கள் என்பதை நம்பப்கூடியதாய் இருக்கிறது.

ஈ. மனிதனுடைய அனுபவத்திலிருந்து கிடைக்கும் சாட்சியம் :

எபேசியர் 2:2–4 இவ்விதமாகப் போதிக்கிறது, அதாவது பிசாசும், அவனுடைய சேனைகளும் அவிசுவாசிகளின் மனதிலும், இருதயத்திலும் கிரியை செய்து மாம்ச இச்சைகளுக்கு இடம் கொடுக்க வைக்கிறது. போதை மருந்துக்கு அடிமை, ஒரே பாலின உறவு, இன்றைய நாளில் உள்ள பிசாசுகளின் வணக்கம் இவைகள் அனைத்தும் மனிதன் அசுத்த ஆவிகளால் ஆட்கொள்ளப்பட்டு செயல்படுகிறான் என்பதற்கு ஆதாரமாக இருக்கிறது.

உ. கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையின் சாட்சியம் :

பிசாசு பிடித்திருந்தவர்கனை சொஸ்தமாக்கினார் என்று சுவிசேஷங்களில் அநேகமுறை நாம் வாசிக்கிறோம்.

## II. அசுத்த ஆவிகள் எவ்வாறு தோன்றின?

அ. அசுத்த ஆவிகளின் தோற்றத்தைக் குறித்து தெளிவாக வேதம் நமக்குச் சொல்லவில்லை.

ஆ. நல்ல வேத விளக்கவுரையாளர்கள் இக்காரியத்தில் வேறுபடுகிறார்கள்.

இ. அசுத்த ஆவிகளின் தோற்றத்திற்கான சில கூற்றுகள் :

1. ஆதாம் தோன்றுவதற்கு முன்பு இருந்த மரித்த ஜனங்களின் ஆவிகள் என்று பலர் எண்ணுவது உண்டு. கீழ்க்கண்ட இரண்டு காரணங்களை வைத்து மேலே கூறப்பட்ட கூற்று சரியில்லை என்று கூறலாம்.

   i) தேவதூதர்களே, ஆதாமுக்கு முன்பு சிருஷ்டிக்கப்பட்டவர்கள். எனவே எந்த ஒரு மனிதனும் ஆதாமுக்கு முன்பு சிருஷ்டிக்கப்படவில்லை.

   ii) அசுத்த ஆவிகள் அனைத்தும் ஆதாம் சிருஷ்டிக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்து, மரித்துப் போன ஜனங்களின் ஆவிகள் என்றால் ஜனங்கள் ஆதாமுக்கு முன்பு வாழ்ந்திருக்கவேண்டும். ஆனால் வேதம் அவ்விதமாக போதிப்பது இல்லை.

2. விழுந்து போன தேவதூதர்கள் இப்பூமியில் மனித உருவம் எடுத்து பெண் கொண்டு சந்ததிகளை உருவாக்கினார்கள். அச்சந்ததி பிற்பாடு அசுத்த ஆவிகளாக மாறினார்கள் என்று சிலர் எண்ணுவது உண்டு. ஆனால் இக்கூற்றும் வேதத்திற்கு ஒத்ததல்ல. வேதம் இவ்விதமாக போதிப்பதில்லை.

ஈ. அசுத்த ஆவிகளின் தோற்றத்திற்கு மிகவும் உகந்த, சரியான பதில் இதுவே. அதாவது, சாத்தான் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்து தள்ளப்பட்டுபோன பொழுது அவனோடு சேர்ந்து தள்ளப்பட்டுப் போன தேவ தூதர்களே அசுத்த ஆவிகளாக மாறினார்கள் (ஏசாயா 14:12–17; எசேக்கியேல் 28:14–17).

1. ''உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது. அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்'' (வெளி.12:9). நட்சத்திரம் என்பது தேவதூதர்களைக் குறிக்கிறது (ஏசாயா 14:13).
2. நரகமானது பிசாசுக்காகவும், அவனுடைய தூதர்களுக்காகவும் ஆயத்தமாக்கப்பட்டது என்று மத்தேயு 25:41–ல் நாம் வாசிக்கிறோம்.
3. தேவதூதர்கள் ஆவிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது (சங்கீதம் 104:4; எபிரெயர் 1:14).
4. விழுந்துபோன தேவதூதர்களில் அநேகர் நியாயத்தீர்ப்புகென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டப்பட்டு அந்தகாரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் (யூதா 6). எண்ணிலடங்காத விழுந்துபோன தேவதூதர்கள் வான மண்டலத்தில் சாத்தானின் ஆளுகைக்குக் கீழ் செயல்பட்டு வருகின்றனர்.

## III. அசுத்த ஆவிகள் எண்ணில் அடங்காதவை :

அ. மாற்கு 5:9 – ''அப்பொழுது அவர் அவனை நோக்கி : உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன் : நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொன்னான்.'' லேகியோன் என்பதற்கு அநேகர் என்று பொருள். தரைப்படையில் உள்ள போர்வீரர்களில் ஏறத்தாழ 3000–திலிருந்து 5000 வரை என்று பொருள் கொள்ளக் கூடிய வகையில் 'லேகியோன்' என்ற வார்த்தை அமைகிறது. மேலும் 300 குதிரைப்படை வீரர்களைக் குறிக்கக் கூடியதாகவும் இருக்கிறது.

ஆ. மாற்கு 16:10–ல் இயேசு மகதலேனா மரியாளிடமிருந்து 7 பிசாசுகளை துரத்தியிருந்தார் என்று வாசிக்கிறோம்.

இ. சாத்தானின் ஆளுகைக்குக் கீழ் இந்த அசுத்த ஆவிகள் இருளின் இராஜ்ஜியத்தை உருவாக்கக்கூடியவர்களாய் இருக்கிறார்கள் (மத்தேயு 12:26; அப்போஸ்தலர் 26:18; கொலோசெயர் 1:13). துரைத்தனங்களும், அதிகாரங்களும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளும் சேர்ந்த கூட்டமாக இந்த இராஜ்ஜியம் காணப்படுகிறது.

ஈ. வேறுவிதத்தில் சொல்வோமென்றால், சாத்தானுக்கு சர்வவல்லமை கிடையாது. இதை வேதம் தெளிவாகப் போதிக்கிறது. ஆனால் அவனுடைய சேனைகள் எண்ணிலடங்காதவைகளாய் இருக்கிறபடியால் உலகமெங்கும் சுற்றித் திரிந்து அவனுடைய காரியங்களை செயல்படுத்துகிறவர்களாய் காணப்படுகிறார்கள்.

## IV. அசுத்த ஆவிகள் யாருக்குக் கீழ்ப்படிகிறது, அவைகள் செயல்படக்கூடிய எல்லை வரம்பு எவ்வளவு?

அ. அசுத்த ஆவிகளின் தலைவனாகச் சாத்தான் விளங்குகிறான் (மத்தேயு 12:24). அசுத்த ஆவிகளை தனது ஆளுகைக்குக் கீழ் வைத்து நடத்துகிறவன் சாத்தானே (மத்தேயு 12:26,27). அசுத்த ஆவிகளுக்கு கட்டளை கொடுக்கிறவனும் சாத்தானே (எபேசியர் 2:2).

ஆ. ''விசுவாசிகளாகிய நம்மை அவரோடே கூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்காரவும் செய்தார்'' (எபேசியர் 2:7). கிறிஸ்துவோடும், அவருடைய சீஷர்களோடும் அசுத்த ஆவிகள் போராட்டம் செய்கிறது (எபேசியர் 6:11–13).

1. ஆகாயத்து அதிகாரப்பிரபுவாகிய சாத்தான் சகல அசுத்த ஆவிகளையும் கட்டுப்படுத்துகிறவனாய் இருக்கிறான் (எபேசியர் 2:2).
2. சாத்தானும் அவனுடைய சேனைகளும் யாரில் குடிபுகலாமென்று தேடித்திரிகிறார்கள். இந்த அசுத்த ஆவிகள் மனிதர்களையும், மிருகங்களையும் ஆட்கொண்டு கட்டுப்படுத்தக்கூடியவைகளாய் இருக்கின்றன (மாற்கு 5:2–13; மத்தேயு 4:24, 8:16, 9:32, 12:22; அப்போஸ்தலர் 8:7, 16:16).

## V. அசுத்த ஆவிகளின் தன்மை, இயல்புகள் என்ன?

அ. அசுத்த ஆவிகள் பரிசுத்தமற்றது (மத்தேயு 12:43; மாற்கு 1:23; லூக்கா 6:18).

ஆ. அசுத்த ஆவிகள் பொல்லாதது (மத்தேயு 12:45; அப்போஸ்தலர் 19:13–16).

இ. அசுத்த ஆவிகள் மிகவும் கொடியது (மத்தேயு 8:28).

ஈ. அசுத்த ஆவிகள் கொடுமையானதும், மிருகத்தனமானதுமாயிருக்கிறது (லூக்கா9:39–42; மத்தேயு 17:14–21).

உ. அசுத்த ஆவிகள் கொடூரமானதும், பொறாமை கொண்டதும், இழிவானதுமாய் இருக்கிறது (மத்தேயு 12:45).

ஊ. சாத்தான் ஒரு கொலையாளி, பொய்யன், ஏமாற்றுகிறவன். அது மட்டுமல்ல அவன் தேவனுடைய பிள்ளைகளைக் குறித்து குற்றம் சுமத்துகிறவனாய் இருக்கிறான். எனவே அவனுடைய சேனைகளாகிய அசுத்த ஆவிகளும் அவனைப் போலவே இருக்கின்றன (யோவான் 8:44; வெளி. 12:9).

எ. அசுத்த ஆவிகளை நம்முடைய கண்களினாலே பார்க்க முடியாது. அவைகள் ஆவிகளாய் இருக்கின்றன.

1. ஒரு ஆவிக்கு சதையும், எலும்பும் இருப்பதில்லை (லூக்கா 24:39).
2. நாம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் போராடுவதில்லை (எபேசியர் 6:12).

ஏ. சாத்தானின் கட்டுப்பாட்டிற்கு கீழ் அசுத்த ஆவிகள் செயல்பட்டாலும், அவைகள் அனைத்தும் தனித்தன்மை, சித்தம், உணர்ச்சிகள், அறிவு, முடிவெடுக்கும் தன்மை முதலான இயல்புகளைக் கொண்டதாய் இருக்கின்றன.

1. அசுத்த ஆவிகள் சிந்திக்கவும், பேசவும் செய்கிறது (அப்போஸ்தலர் 19:15,16; மாற்கு 5:10; லூக்கா 4:34).
2. அசுத்த ஆவிகள் அனைத்தும் சாத்தானின் தூதர்களாய் இருக்கிறபடியால் அவனின் “ஞானத்தை உடையவைகளாய் காணப்படுகின்றன (எசேக்கியேல் 28:12–20).

ஐ. அசுத்த ஆவிகள்அனைத்தும் வல்லமையுடையவைளாய் காணப்படுகின்றன. இந்த வல்லமையைக் கொண்டே மனிதர்களை ஆட்கொண்டு அலைக்கழிக்கிறது (மாற்கு 5:4).

ஒ. தேவனுக்கும், கிறிஸ்துவுக்கும், விசுவாசிகளுக்கும் பிரதான விரோதிகளாக சாத்தானோடு சேர்ந்து இந்த அசுத்த ஆவிகள் காணப்படுகின்றன (மத்தேயு 4:1–11; 2 தெசலோனிக்கேயர் 2:4; லூக்கா 22:31).

## VI. அசுத்த ஆவியின் செல்வாக்கு (Influence) வல்லமை முதலானவைகளில் எல்லை வரம்பு என்ன?

**அ. அவிசுவாசிகளின் வாழ்க்கையில் :**

1. அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்குகின்றன (2 கொரிந்தியர் 4:4).
2. இவ்வுலக வழக்கத்திற்கு ஏற்றபடியாக நடக்கச் செய்கிறது (எபேசியர் 2:2).
3. மனிதர்களுடைய சரீரத்தையும், மனதையும் ஆட்கொண்டு எல்லாவிதமான பொல்லாத காரியங்களைச் செய்யும்படியாகத் தூண்டுகிறது (மாற்கு 5:2–18; ரோமர் 1:24–32; வெளி. 9:20,21).
4. சத்தியத்தை விலக்கி பொய்யை விசுவாசிக்கச் செய்கிறது (1 தீமோத்தேயு 4:1–5).
5. அநேக கள்ளத்தீர்க்கதரிசிகளை உருவாக்குகிறது (1 யோவான் 4:1–4). அது மட்டுமல்லாமல் கிறிஸ்தவ சமுதாயத்தில் குழப்பம், முரண்பாடு போன்ற விதைகளை விதைக்கிறது (மத்தேயு 13:38–40).
6. அசுத்த ஆவிகள் மனதை மாற்றவும், நரம்பு தளர்ச்சியை உண்டாக்கவும், சரீரத்தில் சில அவயவங்களை செயலற்றுப்போக செய்யவும், வியாதிகளைக் கொண்டுவரவும் கூடியவைகளாய் இருக்கின்றன (மத்தேயு 17:14–21, 12:45, 9:32, 12:22).

**குறிப்பு :**

சாத்தானின் வல்லமையும், அவனுடைய சேனைகளின் வல்லமையும் ஒரு வரையறைக்கு உட்பட்டதாகவே இருக்கிறது. சாத்தானை விரும்பி, தேவனை வெறுத்து அவருக்கு எதிராக செயல்படுபவர்களின் வாழ்க்கையில் நாம் பிசாசின் வல்லமையைக் காணலாம். அசுத்த ஆவிகளின் முக்கிய நோக்கமானது சமாதானத்தையும், ஒற்றுமையையும் அழித்து, துன்பத்தையும், வியாகுலத்தையும், குழப்பத்தையும் உண்டாக்குவதே.

**ஆ. விசுவாசிகளின் வாழ்க்கையில் :**

1. விசுவாசிகள் சாத்தானாலே புடைக்கப்பட முடியும் (லூக்கா 22:31).
2. விசுவாசிகளுக்கும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளுக்கும் தொடர்ந்து போராட்டம் இருக்கிறது (எபேசியர் 6:10–18).
3. விசுவாசிகளை எப்பொழுது விழுங்கலாமென்று வகைதேடி சுற்றித் திரிகிறான் (1 பேதுரு 5: 8).
4. சரீரத்திலே ஒரு வேதனையைக் கொடுக்கிறது (2 கொரிந்தியர் 12:7).
5. விசுவாசிகள் அசுத்த ஆவிகளுடன் எந்தவிதமான தொடர்பும் வைத்துக் கொள்ளக்கூடாது (1 கொரிந்தியர் 10:20,21). பொய்யான போதனைகளை கிறிஸ்தவர்கள் மத்தியில் போதிக்கும்படி அசுத்த ஆவிகள் மனிதர்களை ஏவுகிறபடியினால், நாம் எந்த வகையான ஆவி என்று பகுத்தறிய வேண்டும் (1யோவான் 4:1).
6. மறுபடியும் பிறந்த விசுவாசிகள் அசுத்த ஆவிகளால் ஆட்கொள்ளப்பட முடியாது. ஆனால் அசுத்த ஆவிகளால் தாக்கப்பட்டு, வியாதி, நரம்புத்தளர்ச்சி, மனச்சோர்வு, உற்சாகமின்மை, தைரியமின்மை இவைகளுக்கு ஆளாக்கப்படலாம். பாவமான காரிங்களில் உட்படுத்தப்பட முடியும். எனவேதான் விசுவாசிகள் பிசாசை எதிர்த்து நிற்க வேண்டிவர்களாய் இருக்கிறார்கள் (யாக்கோபு 4:7). தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துகொள்ள வேண்டியர்களாய் இருக்கிறார்கள் (எபேசியர் 6:11). அது மட்டுமல்லாமல் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டியவர்களா இருக்கிறார்கள் (1பேதுரு 5;8,9).

## VII. அசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்படுதல் என்றால் என்ன? அசுத்த ஆவியால் ஆட்கொள்ளப் படுதலுக்கும், அசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் செயல்படுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

அ. பழைய ஏற்பாட்டு காலத்தில் அசுத்த ஆவிகள் :

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் அசுத்த ஆவி பிடித்தல், பில்லிசூனியம், குறி சொல்லுதல், மாயவித்தை போன்ற காரியங்கள் இருந்தன. ஆனால் எந்த அளவிற்கு அவைகள் பரம்பி இருந்தன என்பது நமக்குத் தெரியாது. கிறிஸ்து வாழ்ந்த காலத்தில் அசுத்தஆவி பிடித்தல் என்பது எளிதில் காணக்கூடியதாய் இருந்தது. மேலும் இந்நாட்களில் விக்கிரகங்களை வணங்கிக் கொண்டு வரும் நாடுகளில் இவைகளை சாதாரணமாய் காணலாம். அத்துடன் அமெரிக்கா மற்றம் நாகரீகம் அடைந்த நாடுகளில்கூட இந்தவிதமான அசுத்த ஆவிகளின் செயல்கள் அதிகரித்து வருவதையும் காணலாம்.

ஆ. புதிய ஏற்பாட்டில் பிசாசு பிடித்ததற்கான ஆதாரங்கள் :

1. அப்போஸ்தலர் 8:7 “அநேகரிலிருந்து அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது.”
2. மாற்கு 1:32 “பிசாசு பிடித்தவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.
3. மத்தேயு 4:24, 8:28 “பிசாசு பிடித்தவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள், அவர்களை சொஸ்தமாக்கினார்.”
4. மத்தேயு 9:32 “பிசாசு பிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்.”
5. அப்போஸ்தலர் 16:16–18 “அப்போஸ்தலனாகிய பவுல் பிசாசு பிடித்திருந்த ஒரு பெண்ணை சந்தித்தார்.”

இ. பிசாசு பிடித்தல் என்றால் என்ன?

1. அநேக அசுத்த ஆவிகள் மனிதனுடைய சரீரத்தையும், மனதையும் ஆட்கொண்டு அவனைக் கட்டுப்படுத்துவது.
2. அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்ட நபரின் செயல்கள், வார்த்தைகள், சிந்தனைகள் எல்லாமே வேறுபட்டு காணப்படும்.
3. அசுத்த ஆவி பிடித்த மனிதர் வித்தியாசமான சத்தத்திலும், வேறு மொழியிலும் பேசக்கூடும்.
4. அசுத்த ஆவி பிடித்த மனிதர் பைத்தியமாக மாறிவிடுவதில்லை. ஆனால் அந்த அசுத்த ஆவியினாலே முழுதும் கட்டுப்படுத்தப்படுகிறார்.
5. அசுத்த ஆவி பிடித்ததின் விளைவுகள் : அதிகப்படியான வல்லமை (மாற்கு 5:4). ஞானம் (மாற்கு 1:23,24) காணப்படும். அத்துடன் மனச்சோர்வு, துக்கம், மூடத்தனம், ஒழுக்கக்கேடுகள் காணப்படக்கூடும்.
6. அசுத்த ஆவி பிடித்ததின் பொதுவான இயல்பு கிறிஸ்துவுக்கு எதிர்த்து நிற்குதல் (மாற்கு 1:24; 1 யோவான் 4:1–4).

ஈ. பிசாசு பிடித்தலுக்கும், அசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் செயல்படுவதற்கும் உள்ள வேறுபாடு என்ன?

1. இப்பூமியில் பிசாசினாலும், அவனுடைய சேனையினாலும் தாக்கப்படாத மனிதர் எவனும் இல்லை (2 கொரிந்தியர் 4:4; 1 பேதுரு 5:8; 1 தீமோத்தேயு 4:1; 1 யோவான் 4:1–4).
2. பிசாசினால் பிடிக்கப்பட்ட மனிதரின் சரீரம், ஆள்தன்மை, உள்ளம் முழுவதும் பிசாசினாலே ஆட்கொள்ளப் படுகிறது. ஆனால் பிசாசின் செல்வாக்கின் கீழ் செயல்படுவது என்பது ஒரு மனிதர்மேல் காட்டப்படும் வல்லமையாக இருக்கிறது.
3. அசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் செயல்படுவது என்பது விசுவாசி, அவிசுவாசிகள் இடையே வேறுபட்டு காணப்படுகிறது. ஒருவர் சோதனைகளுக்கும், பொல்லாத ஆலோசனைகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்கும் பொழுது அவர்கள் மேல் அசுத்த ஆவியின் செல்வாக்கு அதிகமாகிறது.
4. அசுத்த ஆவியின் செல்வாக்கு ஒரு மனிதனை சத்தியத்தைக் காணாதபடிக்கு குருடாக்கலாம் (2 கொரிந்தியர் 4:4). மனிதர்களை பொய் சொல்ல ஏவும் (அப்போஸ்தலர் 5:3). சத்தியத்தை திரித்து போதிக்கத்தூண்டும் (1 யோவான் 4:1–4). பின்வாங்கிப் போகக்கூடிய நிலையை உண்டாக்கும் (1 தீமோத்தேயு 4:1). மாறுபாடான பழக்க வழக்கங்களை கடைபிடிக்கச் செய்யும் (1 கொரிந்தியர் 10:16–22).

<u>குறிப்பு :</u>

மனிதன் தேவசட்டத்தை மதிக்காமல் அதைப் புறக்கணிக்கும் பொழுது தேவனுடைய பாதுகாப்பு நீக்கப்பட்டு அசுத்த ஆவியின் செல்வாக்கினாலே ஒரு கீழான நிலைக்குக் கொண்டு போகப்படுகிறான் (2 பேதுரு 2:10–12; ரோமர் 1:24–32).

## VIII. அசுத்த ஆவிகளின் முடிவு :

அ. அசுத்த ஆவிகளுக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது என்று அவைகளுக்குத் தெரியும் (மத்தேயு 8:29).

ஆ. அவைகளை அழிக்க வல்லமையும், அதிகாரமும் கிறிஸ்துவுக்கு உண்டு என்பதை அசுத்த ஆவிகள் உணர்ந்திருக்கின்றன.

இ. லூக்கா 8:31–ல் கூறப்பட்டுள்ள பாதாளமும், வெளி. 20:2–ல் கூறப்பட்டுள்ள பாதாளமும் ஒன்றே. இவை ஒரே இடத்தைக் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது.

ஈ. ஆயிரவருட அரசாட்சியின்போது அசுத்த ஆவிகளும், பிசாசும் அடியில்லாத குழியில் (பாதாளத்தில்) அடைக்கப்படுவார்கள். ஆயிரவருட அரசாட்சி முடிந்த பின்பு சிறிது காலம் விடுதலையாக்கப்பட்டு பின்பு நித்திய காலமாக நரகத்திலே தள்ளப்படுவார்கள் (வெளி. 20:10).

## IX. அசுத்த ஆவியின் செல்வாக்கை முறியடிக்க அல்லது பிசாசைத் துரத்துவதற்கு கிறிஸ்தவர்கள் வைத்திருக்கிற உபகரணங்கள் என்ன?

அ. சில மிஷினரிமார்கள் இவ்விதமாக சாட்சி கொடுத்திருக்கிறார்கள். அதாவது மனந்திருந்திய சிலரை பிசாசு பிடித்திருக்கிறது அல்லது அவர்கள் மறுபடியும் அசுத்த ஆவியினால் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்று. ஆனால் என்னுடைய கருத்து அந்த மனிதர்கள் உண்மையாக இரட்சிக்கப்படவில்லை யென்றுதான் சொல்லவேண்டும். கிறிஸ்தவர்கள் அசுத்த ஆவியினால் பலமாகத் தாக்கப்படலாம். ஆனால் ஒருபோதும் அசுத்த ஆவி அவர்களை பிடிப்பது இல்லை அல்லது ஆட்கொள்வது இல்லை.

ஆ. அசுத்த ஆவி விசுவாசிகளைப் பிடிப்பது இல்லை ஏன்?

1. விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாக இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 6:19, 3:16).
2. இவ்வுலகத்தில் இருப்பவனைக் காட்டிலும் கிறிஸ்தவர்களின் உள்ளத்தில் இருப்பவர் பெரியவர் (1 யோவான் 4:4).
3. இருளின் அந்தகார சக்தியிலிருந்து நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் (கொலோசெயர் 1:13, 2:15; அப்போஸ்தலர் 26:18).
4. நமக்காகப் பரிந்து பேசக்கூடிய ஒரு பிரதான ஆசாரியர் ஒருவர் இருக்கிறார். அவர் நம்மை தோற்றுப்போக அனுமதிக்கமாட்டார் (1 கொரிந்தியர் 10:13; யூதா 14; 1 யோவான் 2:1).

இ. கிறிஸ்துவானவர் அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் உடையவராய் இருக்கிறார் என்பதை மனதில் வைத்துக் கொள்ளவேண்டும் (மாற்கு 1:24, 5:6–13, 3:11). கிறிஸ்து நம்மில் வாசம் பண்ணுகிறார் (கலாத்தியர் 2:20). மேலும் அவர் நமக்கு போதுமான வல்லமையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார் (2 கொரிந்தியர் 12:9; பிலிப்பியர் 4:13; எபேசியர் 3:20, 6:10, 1:19,20; பிலிப்பியர் 3:10).

ஈ. கிறிஸ்தவர்கள் அனைவரும் தேவனின் சர்வாயுதவர்க்கத்தை தரித்துக் கொள்ளும்படி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். இவற்றைத் தரித்துக் கொள்வதின் மூலமும் ஜெபத்தின் மூலமும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலமும், பிசாசின் வல்லமையை எதிர்க்கவும், அணைத்துப் போடவும் முடியும் (எபேசியர் 6:11–18; யாக்கோபு 4:7; 1 யோவான் 4:4; பிலிப்பியர் 4:13; மத்தேயு 17:21).

<u>குறிப்பு :</u>

சாத்தானைத் தோற்கடிக்கக்கூடிய வல்லமை நமக்கிருந்தால் உண்மையாகவே அவனுடைய சேனைகளையும் தோற்கடிக்க முடியும்.

உ. கிறிஸ்து தம்முடைய வல்லமையினாலே அசுத்த ஆவிகளைத் துரத்தினார் (மத்தேயு 4:24; 8:16; 9:32; 12:22). கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு பிசாசைத் துரத்துவதற்கான அதிகாரத்தைக் கொடுத்தார் (மாற்கு 3:14,15; மத்தேயு 10:11). கிறிஸ்து தாம் அனுப்பிய 70 பேர்களுக்கு அசுத்த ஆவிகளின் மேல் அதிகாரம் கொடுத்தார் (லூக்கா 10:17). பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், இயேசுவின் நாமத்தினாலும் அப்போஸ்தலனாகிய பவுல் அசுத்த ஆவியைத் துரத்தினார் (அப்போஸ்தலர் 13:6–11; 16:18).

<u>குறிப்பு :</u>

1. இன்றைக்கும் அசுத்த ஆவிகளைக் கட்டுப்படுத்தவும், துரத்தவும் விசுவாசிகள் வல்லமை கொண்டவர்களாய் காணப்படுகிறார்கள் (பிலிப்பியர் 4:13; 1 யோவான் 4:4).
2. கிறிஸ்து ஒருவரே இரட்சிக்கவும், மீட்கவும் முடியும் என்பதை நினைத்துக் கொள்ள வேண்டும். எனவே அசுத்த ஆவிகளைத் துரத்த அவருடைய நாமத்தை மட்டுமே பயன்படுத்தவேண்டும் (அப்போஸ்தலர் 16:18).
3. விசுவாசத்தினாலே நாம் சாத்தானை மேற்கொள்ளமுடியும் (எபேசியர் 6:16). விசுவாசத்தினாலே சாத்தானை எதிர்த்து நிற்கமுடியும் (யாக்கோபு 4:7). நமது சாட்சியின் மூலமும், கர்த்தராகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தின் மூலமும் நாம் அவனை ஜெயிக்கமுடியும் (வெளி. 12:11). அதுமட்டுமல்லாமல் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நாம் அவனை மேற்கொள்ள முடியும் (1 யோவான் 4:4).
4. இருப்பினும் மற்றவர்களிடத்திலிருந்து அசுத்த ஆவியைத் துரத்தும் பொழுது மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். நாம் இலகுவாக இக்காரியத்தை எடுத்துக்கொள்ள கூடாது. சில வேளைகளில் அசுத்த ஆவியினால் நாம் தாக்கப்படலாம். நாம் உபவாசம் இருந்து ஜெபிக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் சக விசுவாசிகளின் உதவியையும் நாடவேண்டும் (மத்தேயு 17:21).

## இறுதியும் முடிவும் :

தேவன் சர்வ அதிகாரம் உடையவராய் இருக்கிறார். சாத்தானும், அவனுடைய சேனைகளும் தேவனுடைய நித்திய நோக்கங்களை நாசம் செய்யமுடியாது. துன்மார்க்கரைத் தண்டிப்பதற்கு அசுத்த ஆவிகளைத் தேவன் பயன்படுத்துகிறார் (சங்கீதம் 78:49; 1 இராஜாக்கள் 22:23). சன்மார்க்கரைப் பரீட்சிப்பதற்கு அசுத்த ஆவிகளைத் தேவன் அனுமதிக்கிறார் (யோபு 2:2–6).

### அசுத்த ஆவிகள் இப்பூமியில் ஏன் இருக்கின்றன?

நமது (இரட்சிப்பின்) மீட்பின் பிரம்மாண்டமான நாடகத்தில் நடிக்க தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரங்களாக இருக்கிறபடியால் அவைகள் இப்பூமியில் இருக்கின்றன. இவ்வுலகத்திற்கு பொல்லாதவைகளின தன்மையையும், அதன் முடிவையும் காண்பிப்பதற்காகத் தேவன் அசுத்த ஆவிகளை இவ்வுலகத்தில் இருப்பதற்கு அனுமதித்திருக்கிறார். அசுத்த ஆவிகளின் மேல் நிர்ணயிக்கப்பட்ட நித்திய தண்டனையானது தவிர்க்க முடியாததாய் இருக்கிறது. சாத்தானும், அவனுடைய சேனைகளும் நித்திய தண்டனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பதை அறிந்து கொள்கிறோம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## சாத்தான் இயல்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. நாகரீக உலகத்தில் அசுத்த ஆவிகளின் செயல்பாடுகள் இருப்பதற்கான அடையாளம் எது?
   a. தேவதைக்கு குழந்தையைப் பலியிடுவது
   b. குற்றங்கள், ஒழுக்கக்கேடுகள், பொய்யான மதங்கள், இன்னும் சில
   c. இரவு நேரத்தில் அசுத்த ஆவிகள் தெருக்களில் நடமாடுவது
2. அசுத்த ஆவிகள் இருப்பதையும், அவைகளின் செயல்பாடுகளையும் குறித்து கிறிஸ்தவர்கள் அறிந்து கொள்வது ஏன் அவசியம்?
   a. பொல்லாத ஆவிகளோடு நமக்குப் போராட்டம் உண்டு என்பதையும், அதை மேற்கொள்வது எப்படி என்பதை அறிந்து கொள்வதற்கும்
   b. இவைகளை உலகத்திலிருந்து அகற்றும்படி நாம் ஆண்டவரிடம் ஜெபிக்கலாம்
   c. அசுத்த ஆவிகளோடு யுத்தம் செய்ய ஒரு படையைத் திரட்டுவோம்
3. அசுத்த ஆவிகள் இருக்கிறது என்பதை வசனத்தின் மூலம் அறிந்து கொள்ள முடியுமா?
   a. இல்லை, காரணம் ஒரு அசுத்த ஆவியைக் கூட நாம் பார்க்கவில்லை
   b. ஆம், காரணம் சாத்தானுக்கு அவைகள் உதவுகிறது
   c. ஆம், காரணம் இயேசுவானவர் அவைகளோடு பேசி, அவைகளை வெளியே துரத்தியிருக்கிறார்
4. அசுத்த ஆவிகள் எவ்விதம் தோன்றின ?
   a. அசுத்த ஆவிகள் அனைத்தும் சாத்தானின் பிள்ளைகள் ஆகும்
   b. ஆதாமுக்கு முன்பு இருந்த ஆவிகள்
   c. தேவனுக்கு விரோதமாக லூசிபர் எழும்பியபொழுது அவனோடு சேர்ந்து கொண்ட தூதர்கள்
5. தேவன் நரகத்தை ஆயத்தப்படுத்தியது யாருக்கு?
   a. மோசமான மக்களுக்கு
   b. சாத்தானுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும்
   c. எதிர்காலத்தில் பாவம் செய்யும் தூதர்களுக்கு
6. அசுத்த ஆவிகளின் எண்ணிக்கையைக் குறித்து வேதாகமம் போதிப்பது என்ன?
   a. ஒரு சில
   b. 3000 முதல் 5000 வரை
   c. எல்லா நேரங்களிலும் உலகம் முழுவதிலும் சாத்தானின் கிரியைகளை நிறைவேற்ற ஏராளமான அசுத்த ஆவிகள் உண்டு
7. அசுத்த ஆவிகள் யாருடைய அதிகாரத்தின் கீழ் செயல்படுகிறது?
   a. இயேசு கிறிஸ்து
   b. சாத்தான்
   c. பொல்லாத விசுவாசிகள்
8. அசுத்த ஆவிகள் எப்பொழுதும் ஜீவிக்க விரும்புகிற இடம் எது?

a. கல்லறைகளில் உள்ள மரங்கள்

b. மக்களின் சரீரம்

c. பறவைகள்

9. அசுத்த ஆவி பிடித்த நபர் எப்படி காணப்படுகிறார்?

a. எப்பொழுதும் பகுத்தறிவில்லாதவராக இருப்பார்

b. வாயில் நுரை தள்ளிக் கொண்டே இருப்பார்

c. அசுத்த ஆவியினால் முழுவதுமாக ஆட்கொள்ளப்பட்டவராக இருப்பார்

10. அசுத்த ஆவி பிடித்தலின் ஒரு பொதுவான இயல்பு எது?

a. அசாதரணமான சரீர பெலன்

b. நடக்க முடியாத நிலை

c. கிறிஸ்துவை எதிர்ப்பது

11. ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் எந்த அளவு அசுத்த ஆவிகள் செயல்பட முடியும்?

a. விசுவாசியை ஆட்கொள்ள முடியும்

b. விசுவாசியை பாவமான காரியங்களுக்கு உட்படுத்த முடியும்

c. விசுவாசியின் சரீரத்தை தங்களது வீடாக மாற்றிக்கொள்ள முடியும்

12. அசுத்த ஆவிகளின் சோதனைக்கு ஒரு விசுவாசி ஒப்புக்கொடுக்கும்பொழுது என்ன நடைபெறும்?

a. அசுத்த ஆவிகளின் சோதனையும், செல்வாக்கும் அதிகரிக்கும்

b. அசுத்த ஆவிகளின் சோதனை குறையும்

c. அசுத்த ஆவிகளின் சோதனை நின்றுவிடும்

13. பொருத்துக :– கீழே உள்ள வசனங்கள் அசுத்த ஆவிகளைக் குறித்து பேசுவது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| --------- | அவைகள் அசுத்தமானது | a. மத்தேயு 12:26,27 |
| --------- | சாத்தானின் தூதுவர்கள் | b. மத்தேயு 4:24 |
| --------- | அவைகள் ஏராளம் | c. மத்தேயு 12:45 |
| --------- | அவைகள் கிறிஸ்துவின் வல்லமைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது | d. மாற்கு 5:9 |

14. பொருத்துக :– கீழே உள்ள வசனங்கள் அசுத்த ஆவிகளின் இயல்புகளைக் குறித்து சொல்வது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| --------- | அவைகள் பொல்லாதவைகள் | a. மாற்கு 5:13 |
| --------- | அவைகள் கொடுமையானவைகள் | b. எபேசியர் 6:12 |
| --------- | அவைகள் கொடூரமானவைகள் | c. மாற்கு 5:10 |
| --------- | அவைகளைப் பார்க்க முடியாது | d. மத்தேயு 12:45 |
| --------- | ஒரு நபர் அல்லது சாதனம் மூலமாக இவைகள் செயல்படுகிறது | e. மாற்கு 5:9 |
| --------- | அவைகளுக்கு அதிக வல்லமை இருக்கிறது | f. மத்தேயு 9:33 |

15. **நிரப்புக :** 2 கொரிந்தியர் 12:7–ன்படி, அசுத்த ஆவிகள் விசுவாசிகளுக்கு என்ன செய்ய முடியும்?

----------------------------------------------------------------------------------------

16. அசுத்த ஆவிகளிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள ஒரு விசுவாசி என்ன செய்ய வேண்டும்?

யாக்கோபு 4:7 ------------------------------------------------------------

எபேசியர் 6:11 ------------------------------------------------------------

1 பேதுரு 5:8,9 ------------------------------------------------------------

17. பிசாசு பிடித்தலுக்கும், அசுத்த ஆவியின் செல்வாக்கின் கீழ் செயல்படுவதற்கும் உள்ள வித்தியாசத்தை கொடுக்கப்பட்ட இடங்களில் நிரப்புக :

பிசாசு பிடித்த மனிதரின் ---------------, ---------------, -------------- முழுவதும் ஆட்கொள்ளப்படுகிறது. அசுத்த ஆவிகள் செல்வாக்கின் கீழ் செயல்படுவது என்பது ஒரு மனிதர் மேல் காட்டப்படும் --------------- இருக்கிறது.

18. கிறிஸ்து அசுத்த ஆவிகளின் மீது அதிகாரங்கொண்டிருக்கிறார்.

எபேசியர் 6:11–18 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி----------------------------------------

------------------------------------------------------------------------------

19. அசுத்த ஆவிகள் விசுவாசிகளை தாக்க முடியும், ஆனால் ஆட்கொள்ள முடியாது என்று கீழே கொடுக்கப்பட்டுள்ள வசனங்கள் சொல்லுகிறது. அதற்கு காரணம் என்ன?

1 கொரிந்தியர் 6:19 ------------------------------------------------------------

1 யோவான் 4:4 ------------------------------------------------------------

கொலோசெயர் 1:13 ------------------------------------------------------------

20. பிறரிடத்திலிருந்து அசுத்த ஆவிகளைத் துரத்துவதை இலகுவாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அசுத்த ஆவியால் நீங்களும் கூட --------------------- எப்பொழுதும் --------------------- உதவியை நாடுங்கள். நீங்கள் உங்களை ------------------------------------------ ஒப்புக்கொடுக்கவும்.

---

அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்

பதிவு எண் : ____________________

முழு பெயர் : ____________________________________________

முகவரி : ____________________________________________

____________________________________________